பக்கங்கள் ஆறு

Registered as a [illegible]

அன்பளிப்பு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 21 ஞாயிற்றுக்கிழமை (04-02-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 70

# கடும் பாதுகாப்புக்கு மத்தியில் இன்று கொழும்பில் சுதந்திர தின நிகழ்ச்சி!

## மக்கள் பங்குபற்றுவது குறைவாகவே இருக்கும்

கொழும்பு, பெப்ரவரி. 4

கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் ஸ்ரீலங்காவின் 48 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் இன்று காலை 8.00 மணி முதல் கொழும்பு சுதத்திர சதுக்கத்தில் நடைபெறவிருக்கின்றன,

வழமை போலல்லாது — மத்திய வங்கி மீது நடத்தப்பட்ட பயங்கர வெடிகுண்டுத் தாக்குதலினால் ஏற்பட்டுள்ளபதற்ற நிலைக்கு மத்தியில் — இம்முறை சுதந்திர தின நிகழ்வு நடைபெறுவதால், அதில் மக்கள் பெரும் எண்ணிக்கையில் பங்குபற்ற மாட்டார்கள் எனக்கருதப்படுகின்றது.

சுதந்திர தின நிகழ்ச்சிகளில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பங்குபற்றுவதால் பாதுகாப்பு கெடுபிடிகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

கொழும்புக்கு வெளியே

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழ்க் கட்சிகளின் சிங்கப்பூர் மாநாடு ரத்து!

கொழும்பு, பெப். 4

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளுக்கு என சிங்கப்பூரில் நாளை முதல் மூன்று நாள்களுக்கு நடத்தப்படவிருந்த மாநாடு இலங்கை அரசின் ஆட்சேபணையையடுத்து ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

''இன்ரநஷனல் அலேட்'', லண்டன் தகவல் மையம் ஆகியவற்றினால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததும் —

இதில் இலங்கையில் இருந்து ஆறு தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொள்ள இருந்ததும் — தெரிந்தவையே. (உ-3)

## கூட்டணியையும் சேர்க்க 5 தமிழ்க் கட்சிகள் முயற்சி

அரசாங்கத்தின் அரசியல் தீர்வு திட்டம் குறித்து ஒருமித்த கருத்தை தெரிவிக்க முடிவு செய்துள்ள ஐந்து தமிழ்க்கட்சிகள் தமிழர் விடுதலைக்கூட்டணியையும் தங்களுடன் சேர்த்துக் கொள்ளும் 'முயற்சியில் இறங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களுடன் ஈரோஸ் தலைவர் சங்கர் ராஜி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தீர்வுத்திட்டம் தொடர்பாக அரசுக்கு ஏழு அம்சக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்து, ஏகோபித்த நிலைப்பாட்டை அறிவிப்பது என ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ், புளொட், ரெலொ ஆகிய ஐந்து கட்சிகள் ஒன்று கூடி முடிவு செய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## வடமராட்சி கரை மீது கடற்படையினர் தாக்குதல்!

வடமராட்சிக் கடற்பிராந்தியத்தில் நேற்றுக் காலை ரோந்து சென்ற கடற்படையினர் கரையோரப் பகுதிகளை நோக்கி கடுமையான பீரங்கித் தாக்குதலையும், கலிபர் தாக்குதலையும் நடத்தினர்.

வெற்றிலைக்கேணிப் பக்கமிருந்து காங்கேசன்துறைப் பக்கமாக ஒரு தாய்க்கப்பல் மற்றும் நான்கு ''டோறா'' படகுகளில் வந்த கடற்படையினர் பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் இருந்து தொண்டமனாறு வரையிலான பகுதிகளை உள்ளடக்கி தொடர்ச்சியாக இத் தாக்குதலை மேற்கொண்டனர்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்கு

சாவகச்சேரி, பெப். 4

தொண்டமனாறில் படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இத்தாக்குதல் தொடர்பான மேலதிக விவரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. (உ-3)

## ஷெல் வீச்சுக்கு 2படையினர் பலி! 4பேர் காயம்

சாவகச்சேரி, பெப். 4

கிழக்கு மாகாணம் காட்டுப் பகுதியில் இராணுவ முகாம் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் கடந்த வியாழக்கிழமை இரவு 8.30 மணியளவில் ஷெல் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர்.

இத்தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டனர் என்றும், 4படையினர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. [உ-3)

## பெரஹரா ரத்து

கொழும்பு, பெப். 4

கொழும்பில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை அடுத்து கொழும்பு கங்காராமய விகாரையில் நடைபெறவிருந்த நவம் பெரஹரா ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. (உ)

## தீயணைப்பு படையின் பணி விமானப் படையின் கீழ்!

கொழும்பு மாநகரசபையின் கீழ் இயங்கிய கொழும்பு தீயணைப்புப் படையின் பணி விமானப்படையின் கீழ் கொண்டு வரப்பட்டிருப்பதாக கொழும்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தீயணைப்புப் படைக்கு தேவையான நவீன உபகரணங்களைக் கொள்வனவு செய்யும்படி நீண்ட காலமாக பணிப்புரை விடுக்கப்பட்டு வந்த போதும் உரிய நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என அமைச்சர் ரத்வத்தை தெரிவித்தார்

விமானப் படையின் கீழ் தீயணைப்புப் படை முற்றாக நவீன மயப்படுத்தப்படும் என்றும் அவர் சொன்னார்.

தற்போது ஐந்து மாடிக் கட்டட உயரம் வரையே பணியில் ஈடுபடக் கூடிய கருவிகள் தீயணைப்புப் படையிடம் உள்ளன என்றும் —

இதனால் மத்திய வங்கிக் கட்டடம் மீதான வெடிகுண்டுத் தாக்குதலின் போது தீப்பிடித்த கட்டடங்களின் மேல்மாடிகளில் இருந்தோரை மீட்க மிகவும் கஷ்டப்பட வேண்டியதாயிற்று என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-6-7)

## மீ‌டுப்பணி இடைநிறுத்தம்

கொழும்பு, பெப். 4

மத்திய வங்கிக் கட்டடத்தின் தற்போதைய நிலை குறித்து தமது முடிவு வரும் வரை—

அப்பகுதியில் மீட்புப் பணி நடைபெறுவதை நிறுத்தும்படி ஸ்ரீலங்கா அரசின் பொறியியலாளர் நிபுணர் குழு கேட்டுள்ளதை அடுத்து மீட்புப் பணி நிறுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

நேற்று பொறியியல் நிபுணர் குழு கட்டடப் பகுதியில் தமது பூர்வாங்க பரிசோதனைகளை மேற்கொண்டது.

அங்கு மீட்புப் பணியில் ஈடுபடுவது பாதுகாப்பானதா என்பது குறித்து நிபுணர் குழுவின் முடிவு வந்த பின்னரே மீட்புப் பணியைத் தொடருவது பற்றி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## நிலவறையிலிருந்து பணநோட்டுகள் மீட்கப்பட்டன என்கிறார் ஆளுநர்!

### ஆனால் அது குறித்து முரணான தகவல்

கொழும்பு, பெப் 4

வெடிகுண்டினால் தகர்ந்த மத்திய வங்கியின் நிலவறைக்குள் இருந்த பண நோட்டுகள் குறித்து முன்னுக்குப் பின் முரணான செய்திகள் வெளியாகியுள்ளன.

பூமியதிர்ச்சியால் கூட பாதிப்புற முடியாத நிலவறைக்குள் நான்கு பணநோட்டுக் களஞ்சியங்கள் உள்ளன என்றும் —

அவைகளிலிருந்த பண நோட்டுகள் நேற்று அகற்றப்பட்டு மக்கள் வங்கி,இலங்கை வங்கி பணநோட்டுக் களஞ்சியங்களில் பத்திரப்படுத்தப்பட்டன என்றும் —

மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ஆனால் பணநோட்டுக் களஞ்சியங்களுக்குச் செல்ல எவரும் அனுமதிக்கப்படவில்லை என்றும் —

வங்கி ஆளுநரின் தகவல் குறித்து தன்னால் எதுவும் கூறமுடியாது என்றும் —

தீயணைப்புப் படை அதிகாரி ஆர். சி. விஜேசிறி தெரிவித்தார்.

அப்பகுதியில் இருந்த நீர் விநியோகக் குழாய்கள் குண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொருளாதாரக் குழப்பம் ஏற்படும் என எச்சரிக்கை

மத்திய வங்கி மீது நடத்தப்பட்ட மிகக் பெரும் வெடி குண்டுத் தாக்குதலினால் நாட்டில் பொருளாதாரக் குழப்பம் ஏற்படலாம் என [illegible]

'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் இந்த எச்சரிக்கையை வெளியிட்டிருக்கின்றார்.

இத்தாக்குதல்கள் மக்களையும், உடைமைகளையும் விட நாட்டின் பொருளாதாரத்தையே முக்கிய இலக்காகக் கொண்டிருக்கின்றது.

நாட்டின் பொருளாதாரத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கம் ஓரளவு நிறைவேறிலிருக்கின்றது.

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி[

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலிகள்

எமது மாணவியும், நண்பியுமாகிய

செல்வி

## பாலச்சந்திரன் சாந்தி

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்.
TACEP - 1995

வடமராட்சி (40117)

# மரண அறிவித்தல்

## நடராசா நல்லம்மா

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையை பிறப்பிடமாகவும் தற்பொழுது கைதடியில் வசித்து வந்தவருமான நடராசா நல்லம்மா (03 - 02 - 1996) சனிக்கிழமை காலை காலமானார். இவர் நடராசாவின் அன்பு மனைவியும், சிவபாக்கியம், சபாரெத்தினம், குணரட்ணம், பாலரட்ணம், வடிவம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரஸ்வதி, தர்மலிங்கம் (இத் தாவி), கனகலிங்கம். இராஜேஸ்வரி, தர்மபாலா (விற்பனைத் திணைக்களம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற இராசதுரை மற்றும் மகேஸ்வரி (கிளி), பத்மாவதி, பத்மராணி, குலேந்திரன் ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நேற்று கைதடியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
த. நடராசா (கணவர்)

தற்போதைய முகவரி:-
த. நடராசா
மே/ பா. ந. தர்மபாலா
பெற்றோல் செட் ஒழுங்கை,
கைதடி. (40572)

# மரண அறிவித்தல்கள்

## இராசையா மகாதேவன் (மகான்)

கொக்குவில் மேற்கு ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த இராசையா மகாதேவன் (மகான்) 03-02 96 சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார். இவர் கமலாதேவியின் அன்புக் கணவரும், மகாரூபன் (நல்லூர் ப. நோ. கூ. சங்க கிளை முகாமையாளர்), இரவிச்சந்திரன், லீலாவதி, உமாபதி, ரூபச்சந்திரன், குலசிங்கம், வசந்தரூபன் ஆகியோரின் அன்புத் தகப்பனும், தர்சினி, சாந்தகுமார், அரியசிவம் ஆகியோரின் அன்பு மாமனும், வேணுகிசன், துர்க்கா, வேணுகஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 04-02-96 ஞாயிற்றுக்கிழமை 12-00 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியை கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
ம. மகாரூபன் (மகன்)

தற்போதைய முகவரி:-
''இரட்ண கிரி'',
கல்வயல் றோட்,
செல்வராசா வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி. (40608)

## பொன்னையா சிங்காரம்

பருத்தித்துறை புலோலி கிழக்கு, விஸ்வகுல வீதி, சபர்மதியில் வசிக்கும் சிங்காரம் அவர்கள். 03-02-96 இல் சிவபதம் அடைந்தார்.

இவர் தங்கரத்தினத்தின் அன்புக்கணவரும், குகநாதன் (J.P), நிர்மலா தேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசதுரையின் (தொலைத்தொடர்புத் திணைக்களம் — மன்னார்) மாமனாரும், சுமதியின் பேரனும், பத்மநாதன், சபாரத்தினம், பஞ்சநாதன், கெங்காதரன், மரகதமணி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 04-02-1996 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிங்காரம் குகநாதன் (J. P)

'சபர்மதி'
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. (40118)

# இன்று தைப்பூசம்

சாவகச்சேரி, செப். 4

இந்துக்களின் விசேட தினமான தைப்பூசம் இன்று ஆலயங்களில் கொண்டாடப்படுகிறது.

ஆலயங்கள் பலவற்றிலும் குறிப்பாக முருகன் ஆலயங்களில் தைப்பூச தினத்தையொட்டி விசேட அபிஷேக, ஆராதனைகள் நடைபெறும்.

இன்றைய தினத்தில் வித்தியாரம்பம் மற்றும் மங்களகரமான, சுபகாரியங்களும் நடைபெறும். (அ-173)

# பட்டிமன்ற நிகழ்வு

''நாடும் நாமும்'' தொடரின் நான்காவது நிகழ்ச்சி இன்று ஞாயிறு மாலை 6-00 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் ''சூரியப் பிரகாசம் இராணுவ நடவடிக்கையில் வெற்றியைப் பெற்றது சிங்கள அரசா? தமிழீழ விடுதலைப் போராட்டமா?''— எனும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறும். (உ-7)

# அகஸ்தியர் நினைவு தின நிகழ்வு

பிரான்சில் அமரத்துவம் அடைந்த நம் நாட்டு எழுத்தாளர் எஸ். அகஸ்தியரின் நினைவுகூரல் நிகழ்வு இன்று ஞாயிறு காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை முனை சென். தோமஸ் பெண்கள் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பங்குத் தந்தை அருட்திரு பி. எம். இம்மனுவேல் அடிகள் தலைமை வகிப்பார்.

நினைவு கூரல் உரைகளை திருவாளர்கள் புத்தொளி, எ. வரதராசா, தெணியான், பொன். பொன்ராசா, துரைராசா ஆகியோர் நிகழ்த்துவர். (இ-51)

## பொருளாதார...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மத்திய வங்கியைப் பொறுத்தவரை அதன் சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதங்களை விட, நிதி மற்றும் வங்கி நடைமுறைகள் தொடர்பாக அதற்கிருந்து வந்த மேலாண்மையைத் தொடர முடியாமல் போகக் கூடும் என்பதே பேரிழப்பாகும்.

இதனால் நாட்டில் நிதித் தளம்பலும் குழப்பமும் பணவீக்கமும் ஏற்படலாம்; அரச, தனியார் வங்கிகள், முதலீட்டு நிறுவனங்கள் போன்றவை தத்தம் விருப்பப்படி கட்டுப்பாடின்றி செயற்பட வாய்ப்புண்டு. ஏற்றுமதி — இறக்குமதி வர்த்தகம், நாளாந்த பணக் கொடுப்பனவு ஆகியவை பாதிப்புறலாம்.

எனவே இத்தாக்குதலினால் ஏற்பட்ட இழப்பை — சொத்துக்களின் அடிப்படையில் மட்டும் வைத்து — குறைவாக மதிப்பிட்டு விட முடியாது. இதுவே வரலாற்றில் பொருளாதாரத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதலாகும். — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-7)


## வடமராட்சி ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலை 7-20 மணியில் இருந்து 7-30 மணி வரை சுமார் 10 நிமிட நேரம் இத் தாக்குதல் இடம்பெற்றது.

படையினரைக் கண்டதும் கரையோரக் கடற்பிராந்தியத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த பல மீனவர்கள் தம் தொழிலை இடைநிறுத்தி கரையை நோக்கி விரைந்து காயமின்றித் தப்பித்துக் கொண்டனர் சிலர் நீரில் பாய்ந்து நீந்திக் கரை சேர்ந்தனர். (உ-15-80-152-173)

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## வேலுப்பிள்ளை முத்துக்கிருஷ்ணர்

(மாயவர்)

தோற்றம்
23- 06- 1925

மறைவு
05- 02- 1993

திதி 03- 02- 1996

ஐயா!

மூன்றாண்டு கால விண்ணக வாழ்வின்
தன்மையை நினைந்து
துணையொன்று வேண்டுமென்று
நீ நினைத்துக் கொண்டாயோ
இழந்தோம் இருவரை என
இங்கு நாம் துடிக்கின்றோம்
கலந்து மகிழ்ந்திட
இங்கு வாராயோ!

உன் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

## முத்துக்கிருஷ்ணர் சிவகுமாரன்

மலர்வு:
13 - 03 - 1956

உதிர்வு:
05 - 01 - 1996

மல்லாகத்தில் அவதரித்த மாண்பு மிகு
சிவகுமாரனே!

அன்பினால் அனைவரையும் ஆண்டவனே;
பண்பின் சிறந்தவனே! அறிவில் உயர்ந்தவனே;
நல்லோர்க்கு நல்லவனே!

நீர் மறைந்து நாள் முப்பத்தொன்றாகியும் எம் மனதில் துயர் ஆறவில்லை. அனலிடைப்பட்ட புழுப்போல் துடிக்கின்றோம். எம்துயர் தீர்க்கவே மீண்டிங்கே வாராயோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய காளி அம்பாளை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி

இன்று ஞாயிற்றுக்கிழமை [4- 2- 1996] அன்னாரின் தற்போதைய இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

மனைவி, மக்கள்,
தாய், சகோதரர்கள்
மருமக்கள், பெறாமக்கள்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. [சி/4010]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்புநிதி மீளளிப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டோர்

தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளல் 1995, முதற்கட்ட கடன் மீளளிப்பின்போது மீளப்பெறாத மக்களின் நலன் கருதி, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கடன் பத்திர தொடர்பு எண்ணும் முழுப்பெயரும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக உதயன் பத்திரிகையில் தொடர்ந்து வெளிவரும். இப்பட்டியலில், உடுவில் மானிப்பாய் பகுதிகள் இன்று பிரசுரமாகின்றன.

(நேற்றைய தொடர்ச்சி)

**உடுவில்**

உ 1674 — முத்துத்தம்பி தருமலிங்கம்
உ 1690 — விஜயலட்சுமி சிவலிங்கம்
உ 1695 — சிவகுரு வேலுப்பிள்ளை
உ 1825 — செல்லப்பா தெய்வேந்திரம்
உ 1879 — கமலேஸ்வரி கணேந்திரன்
உ 1967 — இரத்தினபூபதி குணரட்னம்
உ 2037 — சற்குணம் செல்வநாயகம்
உ 2067 — ஆறுமுகம் வேலுப்பிள்ளை
உ 2113 — செல்லையா குணரட்ணம்
உ 2129 — நாகலிங்கம் கிட்டினர்
உ 2139 — மரகதமணி சிவசுப்பிரமணியம்
உ 2158 — சோமலிங்கம் பரமநாதன்
உ 2196 — சிவபாக்கியம் தம்பிப்பிள்ளை
உ 2277 — சண்முகம் சிவசுப்பிரமணியம்
உ 2319 — சின்னையா பற்குணம்
உ 2347 — தெய்வநாயகி கார்த்திகேசு
உ 2510 — முருகேசு பாலசுப்பிரமணியம்
உ 2525 — செல்வராணி கதாகரன்
உ 2611 — இரத்தினநாயகம் சங்கரதாசன்
உ 2633 — சின்னையா சின்னத்துரை
உ 2647 — திருப்பதி இரத்தினம்
உ 2652 — தம்பையா சோமசுந்தரம்
உ 2676 — சின்னத்தம்பி இராசேந்திரம்
உ 2693 — பரிமளம் கணபதிப்பிள்ளை
உ 2795 — கந்தையா புவனேஸ்வரன்
உ 2806 — சாந்தகுமாரி கருணசேனா
உ 2877 — சின்னக்குட்டி சின்னத்தம்பி
உ 2882 — ஜெயராணி தம்பியப்பா
உ 2961 — தவமணி ஜெயராசா
உ 2983 — இரத்தினம் பரராஜசிங்கம்
உ 3003 — இளையதம்பி சிவபாதம்
உ 3039 — மடோனா சாள்ஸ்
உ 3052 — சங்கரப்பிள்ளை நவரத்தினம்
உ 3053 — சுப்பையா பொன்ராசா
உ 3057 — இறேஸ் சுகுணாமலர் கார்த்திகேசு
வெ 15 — சுதந்திரா செல்வலிங்கம்
வெ 29 — செல்வி யசிந்திரா துரைசிங்கம்
வெ 95 — வைரகப்பிள்ளை பாலசுப்பிரமணியம்
வெ 177 — கெங்காராணி பாலகிருஷ்ணன்
வெ 257 — சுபத்திரா குணபாலசிங்கம்
வெ 279 — நாகமணி நந்தகோபாலன்
வெ 422 — செல்லத்துரை தாமோதரநாதன்
வெ 466 — சின்னத்துரை கோகிலதாசன்
வெ 604 — இளையதம்பி தில்லைநாயகம்
வெ 605 — சிவகௌரிதேவி தர்மலிங்கம்
வெ 726 — சாந்தி பாலசுப்பிரமணியம்
வெ 733 — சுமதி சிவர்க்கலோகேந்திரன்
வெ 758 — பொன்னையா இராமநாதன்
வெ 799 — சுதந்திரதேவி சண்முகநாதன்
வெ 807 — மகாலட்சுமி இரத்தினம்
வெ 810 — பரமேஸ்வரி இராசையா
வெ 820 — பராசக்தி தவலிங்கம்
வெ 822 — ஞானப்பிரகாசம் குலசேகரம்
வெ 856 — செல்லையா இராசலிங்கம்
வெ 859 — பொன்னுச்சாமி செகராஜசேகரம்
வெ 885 — ஜேம்ஸ் தம்பிராஜா சற்குணரஞ்சன்
வெ 912 — திருச்செல்வராணி இராஜேந்திரன்
வெ 857 — கணபதிப்பிள்ளை வைத்திலிங்கம்
வெ 953 — கணேசம்மா மயில்வாகனல்
வெ 954 — சிவப்பிரகாசம் பிறேமாகரன்
வெ 972 — சுபத்திராதேவி வாமதேவன்
வெ 986 — அன்னாசிரோன்மணி இராசரத்தினம்
வெ 987 — அரியதேவி லூதர்
வெ 1042 — குஞ்சிதபாதசர்மா கரிகரசர்மா
வெ 1082 — சிவசிங்கம் புஸ்பராசா
வெ 1118 — கதிர்காமு செல்லையா
வெ 1128 — அனந்தலட்சுமி அம்மாள் தங்கசாமிஐயர்
வெ 1147 — இராணி தயாளன்
வெ 1155 — பெருந்தவச்செல்வி சிறீகிருஸ்ணகுமார்
வெ 1256 — செல்லையாஐயர் சிதம்பரஐயர்
வெ 1472 — சுகிர்தரட்ணம் மித்திரன்
வெ 1478 — அன்னரத்தினம் இராசதுரை
வெ 1493 — செல்லத்துரை சிறீதரன்
வெ 1504 — கீதாஞ்சலி ரவிச்சந்திரன்
வெ 1676 — ஆறுமுகம் கமலநாதன்

**மானிப்பாய்**

மா 46 — செல்லத்துரை பூபாலசிங்கம்
மா 93 — சங்கரப்பிள்ளை கந்தையா நடராசா
மா 106 — இரத்தினகோபால் இராசகோபால்
மா 133 — சின்னத்தம்பி சோமசுந்தரம்
மா 225 — செல்லம்மா சின்னத்துரை
மா 243 — பொன்னையா சபாரத்தினம்
மா 255 — சபாரட்ணம் திருவாஞ்சீஸ்வரன்
மா 307 — சந்திரா இரத்தினம்
மா 413 — மலர்வதி சந்தையா
மா 447 — கலாரஜனி பஞ்சலிங்கம்
மா 458 — சின்னத்தம்பி இராசரத்தினம்
மா 659 — செல்வராணி கைலைநாதன்
மா 948 — செல்வகுமாரி அன்னலிங்கம்
மா 950 — நவமலர் கனகரத்தினம்
மா 1133 — சிவசாமி சிவநேசன்
மா 1170 — சர்வலோகநாயகி வீரசிங்கம்
மா 1214 — சோமசுந்தரம் விமலசிங்கம்
மா 1222 — சுந்தரம்பிள்ளை யோகநாதன்
மா 1252 — கனகரத்தினம் குமாரகுலசிங்கம்
மா 1306 — சின்னவன் பொன்னையா
மா 1310 — வேலன் பிள்ளையான்
மா 1381 — சுமனதேவி தனபாலசிங்கம்
மா 1392 — நாகநாதன் தர்மலிங்கம்
மா 1435 — வேலாயுதம் ஞானேந்திரன்
மா 1518 — சுபாசினி நடராஜா
மா 1535 — வயிரவி செல்லத்துரை
மா 1593 — கந்தையா இராசநாயகம்
மா 1670 — முத்தம்மா சுப்பிரமணியம்
மா 1688 — ஐயம்பிள்ளை வைத்தியநாதர்
மா 1703 — பறேமளா வஸ்ரியாம்பிள்ளை
மா 1892 — சந்திராதேவி சின்னையா
மா 1921 — மரியநாயகி மரியதாஸ்
மா 1923 — புஸ்பராணி இரததினசிங்கம்
மா 1934 — செல்வமலர் இரத்தினசிகாமணி
மா 2028 — வசந்தா ஜெகநாதன்
மா 2043 — பேர்ணடேற் செல்வராசா
மா 2051 — பிலிப்புப்பிள்ளை எட்வேட்ராசா
மா 2115 — புவனேஸ்வரி இராசரத்தினம்
மா 2202 — தாமோதரம்பிள்ளை சிவபாலன்
மா 2219 — சபாரத்தினம் அருள்சுப்பிரமணியம்
மா 2302 — துரைச்சாமி கணபதிப்பிள்ளை
மா 2369 — நேசமலர் தங்கராசா
மா 2386 — சின்னத்துரை பத்மநாதன்
மா 2414 — இராசம்மா இராமசாமி
மா 2475 — சபாரத்தினம் ஸ்ரீகணேஸ்
மா 2499 — சரவணமுத்து துரைச்சாமி
மா 2554 — அமிர்தநாயகி [illegible]ீவரத்தினம்
மா 2621 — அருணாசலம் கந்தசாமி
மா 2642 — சின்னத்தம்பி கருணாமூர்த்தி
மா 2720 — தம்பையா இராசரட்ணம்
மா 2783 — ஐயாத்துரை தனபாலசிங்கம்
மா 2830 — மேரிஆன்கிறேஸ் இம்மானுவேல்
மா 2853 — நாகேஸ்வரி கந்தசாமி
மா 2856 — தம்பிராஜா விஜயரத்தினம்
மா 2863 — கந்தையா கோபிநாத்
மா 2869 — சோதீஸ்வரி அப்புலிங்கம்
மா 2921 — லூர்த்துசவேரியாப்பிள்ளை சூசையப்பு
மா 2970 — அந்தோனிப்பிள்ளை ஸ்ரீவன்
மா 2988 — அன்ரன் பிரான்சிஸ் இராசேந்திரம்
மா 3010 — இராஜராஜேஸ்வரி ஜெயராஜா
மா 3058 — பழனிவேல் இரட்ணதாஸ்
மா 3096 — இசையாஸ் அந்தோனிப்பிள்ளை
மா 3107 — மேரிராணி சூசைப்பிள்ளை
மா 3127 — மேரியோசவ் பெனடிக்ற்
மா 3149 — வடிவேலு கனகசபை
மா 3165 — இசுதோர் அல்பேட்
மா 3192 — பிலோமினா கிளிவேட் வில்லியம்றாஜா
மா 3255 — அரியற்றதபொடா றிச்சாட்
மா 3291 — சின்னத்துரை ஏரம்பமூர்த்தி
மா 3300 — லூர்துமேரி அந்தோனிப்பிள்ளை
மா 3302 — ஜெஜீனா ஞானபூசணம் இம்மனுவேல்
மா 3304 — கந்தையா சின்னத்தம்பி
மா 3312 — மேரியோசப்பின் மனுவல்பிள்ளை
மா 3320 — மேரிதிரேஸ் மனுவேற்பிள்ளை
மா 3458 — லூட்ஸ் மேரி பாக்கியநாதர்
மா 3483 — சிங்கராஜா யோசப் அருள்நாயகம்
மா 3486 — ஆசீர்வாதம் பத்திநாதர்
மா 3509 — நீற்றா ஜெயதேவி மண்டலநாயகம்
மா 3703 — செல்லம்மா துரைராசா
மா 3740 — வீரசிங்கம் கைலாசபிள்ளை
மா 3808 — செல்லத்துரை செல்வரத்தினம்
மா 3862 — நடராசா தங்கராசா
மா 3864 — மேரிமெற்றலின் லோறன்ஸ்
மா 3866 — ஆன்றோகின் அருள்நேசன்
வெ 02 — அன்னம்மா செபஸ்தியாம்பிள்ளை
வெ 24 — திருநாவுக்கரசு சிறீதரன்
வெ 54 — தேவராணி வைத்திலிங்கம்
வெ 75 — யோண்ஒவ் ஆர்க் ஞானப்பிரகாசம்
வெ 78 — பொன்னையா முருகேசபிள்ளை

## பொற்பதியில் சத்துணவு திட்டம்

செம்பியன்பற்று, பெப். 4

குடத்தனையில் உள்ள பொற்பதி என்னும் இடத்தில் சத்துணவுத் திட்டம் ஒன்றினை கிராம சேவகர் ஊடாக இப்பகுதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் நடத்தி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு லக்டோஜன் பால் மாவும், கர்ப்பிணித்தாய்மார்களுக்கும் 5வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கும் இலைக்கஞ்சியும் தினமும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனால் இப்பகுதி சிறுவர்களின் போசாக்கு பேணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது (இ-36)

## நீதிமன்றுகள் இயங்க ஆரம்பம்

கிளிநொச்சி, செப். 4

தமிழீழ மாவட்ட நீதிமன்றுகள் இயங்க ஆரம்பித்துள்ள போதிலும் —

யாழ்ப்பாணம், சுன்னாகம் மாவட்ட நீதிமன்றுகளின் நிர்வாக அலுவலகங்கள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றுப் பகுதிகளில் தேவைகளுகேற்ற வகையில் செயற்படும் என்று தமிழீழ நீதி. நிர்வாகத் துறையினர் அறிவித்துள்ளனர்.

மாவட்ட நீதிமன்றுகளில் குடியியலில் நிலங்களுடன் தொடர்புபட்ட வழக்குகள் தவிர்ந்த ஏனைய வழக்குகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்றும் நீதி நிர்வாகத் துறையினர் தெரிவித்துள்ளனர். (இ 3)

## 30 குடும்பங்கள் மனித கேடயம்

சாவகச்சேரி, பெப். 4

மட்டக்களப்பில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் தம்பானா வெளியில் வாழ்ந்த 30 குடும்பங்களை மனித கேடயங்களாக பயன்படுத்தும் நோக்கில் பிடித்து வைத்திருந்தனர்.

செஞ்சிவைச் சங்க சர்வதேசக் குழு மேற்கொண்ட முயற்சியையடுத்து அக்குடும்பங்கள் விடுவிக்கப்பட்டன,

## வேத வேள்வியும் பிரார்த்தனையும்

சாவகச்சேரி, பெப். 4

கச்சாய் கண்ணகை அம்மன் ஆலயத்தில் இன்றும் நாளையும் வேத வேள்வியும் அமைதி வேண்டும் பிரார்த்தனையும் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

இன்று இரவு பத்து மணிக்கு ஆரம்பமாகும் வேத வேள்வியும் பிரார்த்தனையும் நாளை அதிகாலை முதல் நடைபெறும் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நண்பகல் நிறைவுறும். அதனைத் தொடர்ந்து அன்ன தானம் நடைபெறும்.

அல்லலுறும் தமிழ் மக்களுக்கு அமைதியும் சாந்தியும் கிடைக்க வேண்டி ஆலய பரிபாலன சபையினர் ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.


தைப்பூச நன்நாளில் இருந்து ஆரம்பம்

யாழ். லிங்கம் பட்டு அகம்

இல: 1, நவீன சந்தை (மேல்மாடி), சாவகச்சேரி.

★ சகலவிதமான பிளவுஸ் பீஸ், ★ முகூர்த்தப்பட்டு புடைவைகள் யாவும் மலிவு விலையில் மொத்தமாகவும் விற்கப்படும்.

★ வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. (சீ/2964)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்குரிய நல்ல நிலையில் உள்ள சகல விதமான ஏசியா, லுமாலா, ஈஸ்டர்ன், ரலி சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ப. குகதாஸ், கந்தமுருகேசனார் வீதி, புலோலி தெற்கு. (40569)

நல்ல நிலையில் உள்ள சிங்கர் தையல் மெசின், பல் வைத்தியரால் பாவிக்கப்படும் கதிரை (Dental Chair), மேசை, மின் விசிறிகள் உடன் விற்பனைக்கு உண்டு. இல:525 C/o உதயன், சாரசாலை தெற்கு. (சி-40557)

பற்றறி சார்ஜ் செய்வதற்கு தேவையான சகல உபகரணங்களும் (ஊசிலி மெஷின், மோட்டர், சார்ஜ்ஜர் போன்றவை) விற்பனைக்குண்டு. தொடர்பு: நவம் மின் அகம், நுணாவில் சந்தி, சாவகச்சேரி. (40556)

### போத்தல்கள் தேவை

ஹொர்லிக்ஸ், வீவா (பிளாஸ்டிக் மூடியுடன்), பியர் அல்லது நெல்லிகிறஷ், ஜாம், கோடியல் போத்தல்களை சாவகச்சேரியில் உள்ள ராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ், கிரியோன் கூல் பார், சிறீ விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ் ஆகிய இடங்களில் ஒப்படைத்து அதற்குரிய பணத்தைப் பெற்றுக்கொள்ளவும். ரேஸ் லைன் இன்டஸ்றீஸ் (தனி) வரை. (சி-4001)

ஹொர்லிக்ஸ்/ வீவா (பிளாஸ்ரிக் மூடியுடன்), பியர் நெல்லிக்கிறஷ், ஜாம், கோடியல் போத்தல்களை நெல்லியடியில் உள்ள சுபாஸ் பேக்கவுஸ், சாயிக்கிருஷ்ணா (வதிரி), கண்ணன் களஞ்சியம், கௌரி வியாபார நிலையம், சிறீமுருகன் ஸ்ரோர்ஸ், திருவருள் ஸ்ரோர்ஸ், மிருசுவிலில் உள்ள வதனிகா களஞ்சியம், ஆசைப்பிள்ளை ஏற்றம்- வேல் களஞ்சியம் ஆகியவற்றில் ஒப்படைத்து பணத்தைப் பெற்றுக்கொள்ளவும். ரேஸ் லைன் இன்டஸ்றீஸ் (தனி) லிமிட். (சி-4002)

### O/L தபால் மூலம்

உங்கள் வினாக்களுக்கு B.Sc(Cey) ஆசிரியரால் துரிதமாக விடைகள் அளிக்கப்படும். கடந்த O/L 95 கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம். கடிதத் தொடர்பு:- ஆசிரியர், Medi Aids Clinic, கண்டிவீதி, சாவகச்சேரி. (40045)

## அறிவித்தல்

**யாழ். வேம்படி மகளிர் உயர் கல்லூரி**

மேற்படி கல்லூரியைச் சேர்ந்த **1995** ஆம் ஆண்டு க. பொ. த சாதாரண தரம், **1996** ஆம் ஆண்டு க. பொ. த உயர்தர மாணவிகளையும். ஆசிரியர்களையும், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக சபை அங்கத்தவர்களையும் **1996 - 02 - 05** ஆம் திகதி காலை 10.30 க்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் சந்திக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(40560) அதிபர்

## 28 ஆவது பிறந்ததின வாழ்த்து

**காத்தி - கதிர்காமநாதன்**

கைதடிச் சந்தியை வசிப்பிடமாக கொண்ட காத்தி - தம்பதிகளின் - மகன் - கதிர்காமநாதன் தனது 28 ஆவது பிறந்த தினத்தை இன்று (4-2-96) ஞாயிற்றுக்கிழமை சுவிற்சிலாந்தில் சுதந்திரமாக தமது நண்பர்களுடன் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, அண்ணி, சித்தப்பாமார்கள், சித்திமார்கள், மாமா, டென்மார்க்கில் வசிக்கும் அத்தான், ராணி அண்ணி, சகிலா அண்ணி ஆகியோர் பல்லாண்டு காலம் சுதந்திரமாக வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(40297)

## போத்தல்கள் தேவை

பின்வரும் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகின்றன.

★ கொர்லிக்ஸ்/ வீவா (400g) பிளாஸ்ரிக் மூடியுடன்
★ பியர் அல்லது நெல்லிக்கிறஸ் 625ml
★ கோடியல் போத்தல்
★ ஜாம் போத்தல்

இவற்றை எமது முகவர்களிடம் ஒப்படைத்து அதற்கு உரிய பணத்தை பெற்றுக் கொள்ளவும்.

**ரேஸ்லைன் இன்டஸ்றீஸ் (தனி)**
**வரைவுள்ளது**

பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
(சி/4000)

## யாழ்/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி சாவகச்சேரி

## தாபகர் தினம் - 1996

காலம்:- **05- 02- 1996 திங்கட்கிழமை**
**காலை 10-00 மணி**

இடம்:- **முருகன் கோவில், சங்கத்தானை**

★ கூட்டுப் பிரார்த்தனை
★ நினைவுப்பேருரை : கல்வியும் அபிவிருத்தியும்'

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
(கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

க. சந்திரசேகரா
அதிபர்
(40604)


## வலிகாமத்தில் பாடசாலைகளை மீண்டும் திறக்க நடவடிக்கையாம்

கொழும்பு, பெப். 4

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள வலிகாமம் பகுதியில் பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு பாடசாலை இயங்க ஆரம்பித்துள்ளது என்றும் —

மற்றும் 3 பாடசாலைகள் அடுத்த வாரம் திறக்கப்படும் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் ஏற்கனவே வலிகாமம் அனுப்பப்பட்டுடுள்ளனர் என்றும்—

பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படவிருக்கின்றன என்றும்—

ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சையை நடத்த கல்வி, உயர் கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது என்றும்—

வலிகாமத்தில் கல்வி அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது

(இ-3)

## 535 எழுதுநர்களுக்கு அடுத்த மாதம் நியமனம்

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியனவற்றிலுள்ள எழுதுநர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த வருடம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் இருந்து தெரிவான 535 பேருக்கு அடுத்த மாதம் முதல் வாரத்திலிருந்து நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

மாவட்ட அடிப்படையில் உயர் வெட்டுப்புள்ளிகளைப் பெற்ற 535 பேருக்கு முதலில் நியமனங்கள் வழங்கப்படும் என்றும்—

எஞ்சியுள்ள 700 வெற்றிடங்களை மாவட்டங்களில் அடுத்த உயர் புள்ளிகளைப் பெற்றோர் மூலம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்— தெரியவருகிறது.

இப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய அனைவருக்கும் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-10)

## தென்மராட்சியில் மீண்டும் வயிற்றோட்டம் பரவுகிறது

### 2 நாள்களில் 60 பேர் பாதிப்பு

சாவகச்சேரிப் பகுதியில் வயிற்றோட்ட நோய் மீண்டும் வேகமாகப் பரவி வருகிறது.

வியாழன் வெள்ளிக் கிழமைகளில்மட்டும் அறுபதுக்குமேற்பட்டோர் வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இருவர் வெள்ளிக்கிழமை மரணமானார்கள்.

கொடிகாமம் மந்துவிலைச் சேர்ந்த பி. சின்னவன் (வயது 65), சாவகச்சேரி மட்டுவில் தெற்கைச் சேர்ந்த வெள்ளையன் கணபதிப்பிள்ளை (வயது 61) ஆகியோரே மரணமானவர்களாவர்.

தண்ணீரினால் இந்த நோய் பரவுவதால் குடிதண்ணீரை கொதித்து ஆறவைத்து பின்னர் பருகுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (இ-117)

## கிளிநொச்சியில் வயோதிபர் இல்லம்

கிளிநொச்சி மாவட்டத்தில் வயோதிபர் இல்லம் ஒன்றை அமைப்பதற்கு அரச அதிபர் திரு எஸ். தில்லைநடராசா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

நூற்றுக்கணக்கான வயோதிபர்கள் சந்தைகளிலும் பொதுக் கட்டடங்களிலும், கடைகளிலும் தங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

(இ-175)


## திருமணம் - நன்றி நவிலல்

**ரவி - சுதா**

கைதடி தெற்கைச் சேர்ந்த
*திரு. அ. வேலாயுதர், திருமதி. வே. தங்கம்மா*
அவர்களின் சிரேஷ்ட புத்திரன்
**ரவீஸ்வரன்**
அவர்களுக்கும்,
நீர்வேலியைச் சேர்ந்த
*திரு. மா. புவனேந்திரன்*
(ஆசிரியர், கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம், கிளிநொச்சி சாரணிய மாவட்ட ஆணையாளர், செயலாளர், அகில இலங்கை வர்த்தகக் கலை மன்றம்)
*திருமதி பு. கண்மலர்*
(ஆசிரியை, அத்தியார்இந்துக்கல்லூரி, நீர்வேலி)
அவர்களின் கனிஷ்ட புத்திரி
**சுதாஜினி**

**1-12-95** இல் திருமணப் பதிவும், **3-2-96** இல் Lange Gass 95, 4104 Oberwill திருமணமும் நடைபெற்றன.

திருமண வைபவத்திற்கு நேரில் வருகைதந்தும், நல்வழ்த்துக்கள் கூறி சிறப்பித்தவவர்களுக்கும், வாழ்த்து செய்தி அனுப்பியவர்களுக்கும், பல வகையிலும் உதவியும்ஒத்துழைப்பும்வழங்கிய அனைவருக்கும் எங்களின் இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ரவீஸ்வரன் தம்பதிகள்

மா. புவனேந்திரன்,
'திருத்தணிகை', விசுவர்வளவு,
சரசாலை மத்தி, சாவகச்சேரி
(40563)

தற்பொழுது கிளிநொச்சியில்



# சிறி லட்சுமி நகையகம்

யாழ். நகரில், 220, கஸ்தூரியார் வீதி, மேல்மாடியில்

இயங்கிய எமது ஸ்தாபனம் தற்பொழுது கிளிநொச்சியில் — யாழ் வீதியில்— நீதிமன்றம் முன்பாக — இயங்கத் தொடங்கியுள்ளது.

புத்தம் புதிய டிசைன்களில் தங்க நகைகளை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்.

மங்கையர் மனங்களைக் கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் நகைகளைப் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்.

**சிறி லட்சுமி நகையகம்**
**யாழ். வீதி, ( நீதி மன்றம் முன்னால் ) கிளிநொச்சி.**
(சி/4007)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மறுபரிசீலனை செய்வரா?

பிரிட்டிஷ்காரரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்று ஐம்பது வருடங்கள் நிறைவு பெறுவதற்கு இன்னும் இரண்டு வருடங்களே உள்ளன. சிங்களவருக்கும் தமிழர்களுக்கும் (ஏனைய சிறுபான்மையினருக்கும்) கிடைத்த விடுதலை ஒரு சில வருடங்களிலேயே சிங்களவருக்கு மட்டுமான ஒன்றாக மாற்றப்பட்டு விட்டது. தாம் ஆளும் இனமாகவும் தமிழர்கள் ஆளப்படும் இனமாகவும் இருக்க வேண்டும் என்ற அடக்குமுறை, அதிகாரத்தனச் சிந்தனை சிங்களத் தலைவர்களிடம் உதித்ததன் விளைவு இது.

இலங்கை சிங்களவருக்கு மட்டுமே சொந்தமானது என்றும், ஏனையோர் அவர்களுடன் சமத்துவ உரிமைகளுடன் வாழகூடாது என்றும் அவர்கள் கொண்ட நிலைப்பாடும் அதனை நடைமுறையாக்க மேற்கொண்ட நடவடிக்கைகளும் —

நாற்பத்தெட்டாவது சுதந்திரதினமான இன்று, கொழும்பில் அதனைக் கொண்டாட முடியுமோ என்ற ஒரு சந்தேக நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

சிங்களத் தலைவர்களின் அடக்குமுறைச் சிந்தனை மாறவில்லையெனில் இன்னும் இரண்டு வருடங்களில் — இலங்கை விடுதலை அடைந்த ஐம்பதாவது ஆண்டில் — அது ஸ்ரீலங்காவாகவும் தமிழீழமாகவும் இரண்டு பட்டுப் போவதற்கான சகல அறிகுறிகளும் தென்படுகின்றன.

தமிழர்களுக்குப் பிரச்சினைகள் உண்டு. அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. இப்போது இந்த நாட்டில் நிலவுவது இனப்பிரச்சினையே; பயங்கரவாதப் பிரச்சினை அல்ல. தமிழர்களையும் நாட்டின் சம பிரசைகளாகக் கருதி அவர்களின் நியாமான உரிமைகள் வழங்கப்படவேண்டும் — என்று சிங்கள தேசத்தின் இரண்டு பிரதான கட்சிகளின் தலைவர்களும் மாறி மாறிப் பேசியும் எழுதியும் வந்த போதிலும் —

செயலளவில் சிங்களவருக்குச் சாதகமான அவர்களின் ஆண்டான் — அடிமை இலக்கை நிலைநாட்டும் தீர்வு ஒன்றையே தமிழர்கள் மீது திணிக்க முயல்கிறார்கள்.

1957 ஆம் ஆண்டு தொடக்கம் சிங்களத் தலைவர்கள் அதற்கான முயற்சிகளிலேயே முழு அளவில் ஈடுபட்டுவருகிறார்கள்

இராணுவத்தைக் கொண்டு தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்க முயற்சிக்கிறார்கள். தமிழர்களையே அழித்துவிட முனைகிறார்கள்.

சிங்களத் தலைவர்களின் இந்த அணுகுமுறை வெற்றி அளிக்கப்போவதில்லை. நாடு முழுவதிலும் தொடர்ந்து இரத்த ஆறு ஓடச்செய்து பேரழிவுகளை உண்டாக்கி நாட்டைப் பிளவுறச் செய்யவே இது வழிவகுக்கும்

சுதந்திரம் தமக்கு மட்டுமே சொந்தம் என்று நினைக்கும் — தாமே இந்த நாட்டின் முதல் தரப் பிரசைகளாக இருந்து விசேட உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிக்க வேண்டும் என்று எண்ணும் — சிங்கள-பௌத்த பேரினவாதிகள் இன்றைய தினத்தில் ஆற அமர இருந்து சிந்திக்கட்டும். அவர்கள் தமது அணுகுமுறையை மறுபரிசீலனை செய்யாவிடில் நாடு பிளவுபடும் என்பதனைக் கருத்தில் கொள்ளட்டும்.

# இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசுக்கு ஆர்வம் இருக்கிறதா?

## ஐ. தே. கட்சி எம். பி. கேள்வி

லண்டன், பெப். 4

'இனப்பிரச்சினை தீர்வு யோசனைகள் குறித்து அரசுக்கு உண்மையான ஆர்வம் இருக்கிறதா என்பது சந்தேகத்துக்குரியது'.

இப்படிக் கூறியுள்ளார் ஐ.தே. கவின் எம்.பியும், பொருளாதாரப் பேராசிரியருமான கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு.

பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

அரசு வெளியிட்டுள்ள தீர்வு யோசனைகளில் அலகுபற்றி தெளிவாகக் காட்டப்படவில்லை.

அரசியல் சீர்திருத்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் அரச நாடாளுமன்ற உறுப்பினர்களே பெரும்பான்மையினர்.

அப்படியிருந்தும் அலகு குறித்து தெளிவாகத் தெரிவிக்க அரசுக்கு ஆத்ம சக்தியில்லை. இதில் இருந்து அரசின் ஆர்வம் புலனாகிறது.

17 ஆண்டுகளாக ஐ. தே. க. இனப்பிரச்சினையைத் தீர்க்க முயலவில்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது. அது நியாயமற்ற குற்றச்சாட்டாகும்.

தேசிய பிரச்சினையாகக் கருதி தீர்க்க ஐ. தே. க. முயன்ற சமயம், சுதந்திரக் கட்சி, இனப்பிரச்சினையை தேசிய பிரச்சினையாகக் கருதி செயற்படவில்லை. எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவற்றையும் எதிர்த்தது.

ஐ. தே. க. இனப்பிரச்சினையை அன்றும், இன்றும், என்றும் தேசிய பிரச்சினையாக அங்கீகரித்துள்ளது.

— இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3-6)

# அதிக எண்ணிக்கையில் கொலை இடம்பெறும் நாடு

## 'சாதனை' குறித்து சந்திரிகா

''அரசியல் காரணங்களுக்காக உலகில் அதிக எண்ணிக்கையில் மனிதக் கொலைகள் இடம் பெறும் நாடாக இலங்கை சாதனை படைத்திருக்கிறது''

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க ரஜரட்ட பல்கலைக்கழக திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து உரையாற்றுகையில் இப்படிக் கூறினார்.

கடந்த புதன்கிழமை நடந்த இந்த வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில்,

'கடந்த காலத்தில் வடக்கிலும், தெற்கிலும் இடம் பெற்ற பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முழுச் சனத்தொகையிலும் ஒருசதவீதத்தினரே சம்பந்தப்பட்டனர். இதற்கு காரணம் என்னவென்று கல்வியாளர்கள் இதுவரை தேடவில்லை! என்றார். (இ-3)

### மத்திய வங்கித் தாக்குதல்

# நேர காலத்துடனேயே திட்டமிடப்பட்டிருந்தது

## பதில் பொலிஸ்மா அதிபர் தகவல்

கொழும்பு, பெப். 4

மத்திய வங்கி மீது புதன்கிழமை நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் புலிகளினால் நேர காலத்துடனேயே திட்டமிடப்பட்டதொன்றாகும்.

பதில் பொலிஸ் மா அதிபர் மித்ரா ஆரியசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

புலிகள் கொழும்புக்குள் இலகுவில் நுழையக் கூடிய இடங்களில் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர் என்றும் அவர் கூறினார். (இ-3)

# புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1996-02-04 ஞாயிறு

- ★ 8-00 — ஆரம்பம்
- ★ 8.02 — வாழ்வின் கோலங்கள்.
- ★ 8 20 — வரலாறு சொல்லும் பாடம்.
- ★ 8. 30 — செய்திகள்.
- ★ 8. 40 — அறிவிப்புகள் — தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப்பாடல்கள்.

1996-02-05 திங்கள்

- ★ 7.00 — ஆரம்பம்
- ★ 7-02 — மாவீரர் வணக்கம்
- ★ 7. 10 — இசைமாலை.
- ★ 7. 30 — செய்திகள்
- ★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7.45 — அறிவிப்புகள் — தொடர்ந்து 8-00 மணி வரை தாயகப்பாடல்கள்.

# பூநகரியில் பேரருட் உதவி

பூநகரி, பெப். 4

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து பூநகரிப் பகுதியில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கு பேரருட் அமைப்பு பாய், படுக்கை விரிப்புக்கள், துவாய் போன்றவற்றை வழங்கியது.

பூநகரி பிரதேச செயலர் திருதிரு. இரா. இரவீந்திரன் தலைமையில் இந்த பொருள்கள் வழங்கும் வைபவம் இடம் பெற்றது. (இ-3-133)

# குண்டு வெடிப்புக் குறித்து ஐ. நா. செயலர் கலக்கம்

## அரசியல் தீர்வுக்கு வலியுறுத்து

கொழும்பு, பெப் 4

கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பால் தான் கலக்கமடைந்ததாக ஐ. நா. செயலாளர் பூட்டஸ் பூட்ரஸ் காலி நியூயோர்க்கில் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்ற தமது கோரிக்கையை அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இனப்பிரச்சினை நாட்டுக்கு பெரும் இழப்பையும், துயரத்தையும் ஏற்படுத்தி வருவதாக குறிப்பிட்ட அவர், அதற்கு உடனடியாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

குடிமக்கள் உயிரிழப்பதையும் அவர் கண்டித்தார். (இ-3)

# பணம்பெற கொழும்பு புறப்பட்டவர்கள் வவுனியாவில் தவம் கிடக்கும் பரிதாபம்

தாளையடி, பெப். 4

வெளிநாடுகளில் உள்ள உறவினர்களிடமிருந்து பணம் பெறுவதற்காக கொழும்பு நோக்கிப் புறப்பட்ட வடபகுதித் தமிழர்கள் பலர், கொழும்பு செல்லாது வவுனியாவில் நின்று கொண்டே தமது உறவினர்களுடன் தொடர்பு கொண்டு பணத்தைப் பெற முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் உள்ள தற்காலிக முகாம்களில் பாஸ் வழங்குவதில் படையினர் காட்டும் கெடுபிடிகள் காரணமாகவே இப்படியாக பலர் கொழும்பு செல்லும் திட்டத்தைக் கைவிட்டு விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணத்தை ''உண்டியல்'' பணமாக மாற்றிக் கொள்வதற்கு வவுனியாவில் தாமதமாவதால் இவர்கள் வவுனியாவில் பலநாள்கள் தவம் கிடக்கின்றனராம்

[இ-144]

# தாதியர் பயிற்சிக் கல்லூரி நாளை முதல் இயங்கும்

யாழ். தாதிகள் பயிற்சிக்கல்லூரி நாளை திங்கட்கிழமை முதல் மந்திகையில் இயங்கும் என யாழ். போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி ந. கனகரத்தினம் அறிவித்துள்ளார்.

மாணவதாதிகள் அன்றைய தினம் காலை தமது பயிற்சியைத் தொடர்வதற்காக சமூகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கட்டட மேல் மாடியில் தாதியர்கள் பயிற்சிக் கல்லூரியை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-15-173)

### கரவெட்டி மருத்துவமனைக்கு

# குளிர்சாதன பெட்டி ஒன்றை அனுப்பி வைக்க கோரிக்கை

வடமராட்சி, பெப். 4

கரவெட்டி சின்னத்தம்பி ஞாபகார்த்த அரசினர் மருத்துவமனைக்கு குளிர்சாதனப் பெட்டி ஒன்றை அனுப்பி வைக்குமாறு கோரிக்கைவிடப்பட்டுள்ளது.

யாழ் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு மேற்படி வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபை இக்கோரிக்கையை விடுத்துள்ளது.

இவ்வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை மும் மடங்காக அதிகரித்துள்ள இவ்வேளையில் அவசரத் தேவைக்கான, முக்கிய மருந்து வகைகளை பழுதடையாமல் பாதுகாக்க குளிர்சாதனப் பெட்டி ஒன்று தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ- 173)

# குட்டியைத் தேடிவந்த யானைக் கூட்டம்!

## பயிர்களை அழித்து அட்டகாசம்

கிளிநொச்சி, பெப். 4

யானைக்குட்டியைத் தேடிவந்த யானைக்கூட்டம் ஒன்று பயிர்களை அழித்து பெரும் சேதம் விளைவித்த சம்பவம் உருத்திரபுரம் பகுதியில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது :-

உருத்திரபுரம் நீவில் காட்டுப்பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் யானைக்குட்டி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த யானைக்குட்டியை ஊர்மக்கள் குடிமனைப் பகுதிக்கு கொண்டுவந்து கட்டி வைத்திருந்தனர். மூன்று தினங்களில் அந்த யானைக்குட்டி இறந்துவிட்டது. ஊர்ப்பகுதியை அண்டிய இடத்தில் அந்த யானைக்குட்டியின் உடல் புதைக்கப்பட்டது.

புதைக்கப்பட்ட பின்னர், யானைச்கூட்டம் ஒன்று குட்டியைத் தேடி அங்கு வந்துவிட்டது. அதுமட்டுமல்ல குட்டியைக் காணாத கோபத்தில் அப்பகுதியில் இருந்த வயல் நிலங்களை அழித்து பெரும் சேதம் விளைவித்தது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

# பளையில் மலேரியா பரவுகிறது

சாவகச்சேரி, பெப். 4

பளை பிரதேசத்தில் உள்ள வண்ணான் கேணி, இந்திராபுரம், மற்றும் எழுதுமட்டுவாள் பகுதிகளில் மலேரியா நோய் பரவி வருகிறது

கடந்த ஜனவரி மாதத்தில் 1268 பேருடைய இரத்தம் பரிசோதிக்கப்பட்டதாகவும்.

இதில் 322 பேர் சாதாரண மலேரியாவினாலும் 6 பேர் மூளை மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-152)

# மரணச்சடங்குக்கு ரூ. 25 ஆயிரம்

மத்திய வங்கி குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட வங்கியின் ஊழியர்களுக்கு ஈமக்கிரியை செலவுக்கு 25 ஆயிரம் ரூபா வீதம் மத்திய வங்கி வழங்கும் என்று வங்கியின் ஆளுநர் ஜெயவர்த்தனா தெரிவித்தார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்

நீண்டகால அனுபவத்துடன் தரமான சேவையை வழங்கிய

**சிவசக்தி அரைக்கும் ஆலை**

மீண்டும் இன்று முதல் (4- 2- 96) ஞாயிறு, இயங்க வுள்ளதையிட்டு மனமார வாழ்த்துகிறோம்.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக நண்பர்கள்.

சிவன் கோவிலடி,
பிரதான வீதி,
பருத்தித்துறை. (40115)

## IN LOVING MEMORY OF



**ALICE MUTHUMANEY ARIARATNAM**

BORN: 15 — 05 — 1916
CALLED TO GLORY: 04 — 02 — 1994

Many women do noble things but you surpass them all. A Woman who fears the Lord is to be praised.

Fondly Remembered by her HUSBAND and LOVED ONES

"Melita"
707, Hospital Road,
Jaffna.
(40287)

Present Address
"Arulakam"
Wesley Lane,
Point Pedro.

## லயன்ஸ் கண் சிகிச்சை முகாம்

கம் நடந்தும் கண் சிகிச்சை முகாம் பக்கிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வு மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும்.

கண் பரிசோதனை, இலவச கண்ணாடி வழங்கல், இரத்த அழுத்த பரிசோதனை, சலரோக பரிசோதனை ஆகியவை இடம்பெறும்.

### நிலவறை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வெடிப்பால் தகர்ந்ததால் நில வறைகளில் நீர் நிரம்பியுள்ளன என்றும் —

அங்கு எவரும் உயிருடன் இருப்பதற்கு சாத்தியம் இல்லை என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (உ-3-6)

### கடும்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வேறு பிரதேசங்களில் இருந்து முப்படையினரும் பொலீஸாரும் தலைநகருக்குள் கொண்டு வரப்பட்டு குவிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

சுதந்திர சதுக்கத்தில் நடைபெறும் நிகழ்வுக்குப் பின்னர் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் விருது வழங்கும் வைபவத்தில் படையினருக்கான வீர திர விருதுகளை ஜனாதிபதி வழங்குவார்.

பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு இம்முறை பொது மக்கள் பெருமளவு பங்குபற்றும் ஆடம்பர நிகழ்ச்சிகளுக்குப் பதிலாக மத வைபவங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. [உ-3-6 7]

## இடம் மாற்றம்

**SOUND ENGINEERS**

**சவுண்ட் என்ஜினியர்ஸ்**

வானொலி, T.V. உபகரணங்களுக்கு யாழ். நகரில் புகழ்பெற்ற ஒரு சிறந்த ஸ்தாபனம்.

சவுண்ட் என்ஜினியர்ஸ்
4 ஆம் குறுக்குத் தெரு,
புனித அந்தோனியார் வீதி,
பருத்தித்துறை. (40116)

## திருக்குமரன் அடகு நிலையம்

20, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

மேற்படி ஸ்தாபனத்தில் அடகு வைத்தவர்கள் தங்கள் நகைகளை கீழ்க்காணும் முகவரியில் வந்து காலந்தாழ்த்தாது மீட்டுக் கொள்ளவும்.

சி. வே. அருட்சோதி
(நகை வியாபாரம்)
'வெண்மை' விலங்கு வேளாண்மை சேவை நிலையத்திற்கு முன்பாக
183, கண்டி வீதி, சாவகச்சேரி,
(40609)

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் இராசேந்திரம்

யாழ்ப்பாணம், கைலாசபிள்ளையார் கோயில் வீதி, நல்லூரை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது செட்டித்தெரு, புலோலி கிழக்கை வசிப்பிடமாக கொண்டவரும் வல்லிபுரம் இராசேந்திரம் 3.2.96ல் காலமாகி விட்டார்.

இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், சுதாநிதி (மங்கயர்க்கரசி வித்தியாலய ஆசிரியை), கலாநிதி, பத்மநிதி (கல்வித் திணைக்கள எழுதுவினைஞர்), ஜெயந்திநி (கனடா), குலநிதி (கனடா), உதயேந்திரன் (சுனடா), தவேந்திரன் (கனடா), விஜேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேஸ்வரன் (மத்திய கல்லூரி எழுதுவினைஞர்), ரவீந்திரராஜா (யாழ்ப்பாணம், போதனா வைத்திய சாலை), கண்ணன் (கனடா), கிருஷ்ணதாஸ் (கனடா) ஆகியோரின் மாமனாரும், நிஷாந்தன், அனுஷாந்தன், யசோத, கிருத்திகா, யசிந்தன், றொஷான், மசிதா, கிருஷ்திகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (4.2.96) காலை 10 மணிக்கு தற்காலிக வசிப்பிடத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி நா.இராசேந்திரம்
(மனைவி)

செட்டித்தெரு,
புலோலி கிழக்கு. (40571)

2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்


உ

**கே. கே. இராசரத்தினம் நகை மாடம்**

277, சந்தோசம் சாலை (கஸ்தூரியார் வீதி). யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனம் தற்போது

இல. 10, கண்டி வீதி, சாவகச்சேரியில் நாளை 05 - 02 - 1996 இல் இருந்து இயங்க ஆரம்பிக்கின்றது என்பதை எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

(40567)

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த சிறி நதியா நகைமாடம் தமது வாடிக்கையாளர்களின் நலன் கருதி சாவகச்சேரியில் தமது வியாபாரத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

**சிறி நதியா நகைமாடம்**

கண்டிவீதி, சபீதா உணவகம் அருகாமை — சாவகச்சேரி.

மேற்படி ஸ்தாபனத்துடன் கீழ்வரும் ஸ்தாபனங்களும் இயங்குகிறது என்பதை தமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றார்கள்

★ யாழ். சானுகா நகைமாடம்,
★ சோபனா நகைமாட

ஸ்தாபனத்தார்கள். (சி/4009)

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த சிறி அமலா நகைமாடம் தமது வாடிக்கையாளர்களின் நலன் கருதி சாவகச்சேரியில் தமது வியாபாரத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

**சிறி அமலா நகைமாடம்**

கண்டிவீதி, சபீதா உணவகம் அருகாமை — சாவகச்சேரி.

மேற்படி ஸ்தாபனந்துடன் கீழ் வரும் ஸ்தாபனங்களும் இயங்குகின்றன என்பதை தமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றார்கள்

★ யாழ். நந்தினி நகைமாடம்,
★ சுப்பஸோ வீடியோ

ஸ்தாபனத்தார்கள். (சி/4008)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன்(பிறைவேற்) லிமிட்டெட் சாவகச்சேரி, சாரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 04-02-96இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.